**நீ துக்க முகமாயிருக்கிறது என்ன ?**

# உன் துக்க நாட்கள் முடிந்துபோம். ஏசாயா 60 : 20

கிறிஸ்துவுக்குள் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

உன் துக்க நாட்கள் முடிந்துபோம் என்ற வசனத்தின்படியாக வாழ்த்துகிறேன்.

அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம், நிசாம் மாதத்திலே, திராட்சை ரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில் பான பாத்திரக்காரனாகிய நெகேமியா அதை எடுத்து ராஜாவுக்குக் கொடுத்தார்.

அப்பொழுது ராஜா நெகேமியாவைப் பார்த்துக் கேட்டார்;

**நீ துக்க முகமாயிருக்கிறது என்ன ? உனக்கு வியாதி–யில்லையே ? இது மனதின் துக்கமே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை** – என்பதாக.

வாக்குத்தத்தத்தை வாஞ்சையோடு வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

நீங்களும் கூட துக்க முகமாயிருக்கிறது என்ன என்று கேட்கிறேன். வியாதியா அல்லது வறுமையா அல்லது வேலையில்லாத திண்டாட்டமா ? அல்லது பாவப் பிடியா அல்லது பில்லி சூனியமா அல்லது ஏமாற்றமா அல்லது தோல்வியா அல்லது கடனா அல்லது நம்பிக்கை துரோகமா அல்லது எதிர்பார்ப்பா அல்லது வேறு என்ன தேவை ?

வேண்டாம், வேண்டாம் பயப்பட வேண்டாம்.

வேதம் சொல்கிறது,

**உன் துக்க நாட்கள் முடிந்துபோம்.**– என்பதாக.

பரீட்சைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் சகோதரனே சகோதரியே, கடந்த ஆண்டில் உள்ள தோல்வியைக் கண்டு கலங்குகிறீர்களா ? அல்லது கடந்த பரீட்சையில் கண்ட தோல்வியைக் கண்டு துவழ்ந்துவிட்டீர்களா ?

இதோ, உங்கள் நம்பிக்கையின் வசனம்,

**"உன் துக்க நாட்கள் முடிந்துபோம்".** ஆமென்.

கர்த்தருடைய வசனத்தை வாசியுங்கள். தியானியுங்கள். நம்புங்கள். உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். சாட்சி கூறுங்கள். சாட்சி கூறுவேன் என இன்றைக்கே தீர்மானம் செய்யுங்கள். அப்படியே அதை நிறைவேற்றுங்கள்.

**இது பரிசுத்த நாள், துக்கப்பட வேண்டாம்.**

உங்களை ஆறுதல் படுத்தவே தேவ வசனம் கடந்து செல்கிறது. ஆமென்.

உங்கள் துக்கம் மகா கொடியது என தேவன் அறிவார். என் துக்கம் சொல்லி முடியாதது **(யோபு 6 : 3)** என நீங்கள் அறிக்கையிடுவதையும் தேவன் அறிவார்.

**ஆம், வேதம் சொல்கிறது, யோபு 14 : 22**

அவன் ஆத்துமா அவனுக்குள் இருக்குமட்டும் அதற்கு துக்கமுண்டு.

**சங்கீதம் 31 : 9 சொல்கிறது :** துக்கத்தினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என்று வயிறும் கருகிப்போயிற்று – என்பதாக. இதே அனுபவத்தைத் தான் நீங்களும் கடந்து வந்தீர்கள்.

**வேதம் சொல்லுகிறது :** நீதிமான்களுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், அவைகளெல்லாவற்றினின்றும் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தருடைய ஜனமே, தேவன் உன்னையும் கட்டாயம் விடுவிப்பார். நிச்சயமாகவே

**உன் துக்க நாட்கள் முடிந்துபோம்.** – அல்லேலூயா !

**பிரசங்கி 7 : 3** (மு) சொல்கிறது, நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்.

**ஏன் உங்கள் வாழ்க்கையில் துக்கம் ?**

**பிரசங்கி 7 : 3** (பி) சொல்கிறது, முக துக்கத்தினாலே இருதயம் சீர்படும்.

ஆம் சகோதரனே, சகோதரியே,

உன் இருதயத்தை சீர்படுத்தவே தேவன் உன் வாழ்க்கையில் துக்கத்தை அனுமதித்திருந்தார்.

**எபிரெ. 12 : 11 சொல்கிறது, :** எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாகக் காணாமல், துக்கமாய் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.

**2 கொரி. 7 : 10 சொல்கிறது, :** தேவனுக்கேற்ற துக்கம், பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. ஆமென். அல்லேலூயா !

**கீழ்க்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.**

**என் துக்க நாட்கள் முடிந்துபோம்** (மீண்டும் கூறுங்கள்)

**என் துக்க நாட்கள் முடிந்துபோம். ஆமென்.**